


**05.10.2026**

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - சுவிட்சர்லாந்து இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் 100 பில்லியன் டாலர் முதலீடுகளுக்கு இலக்கு நிா்ணயிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தொிவித்துள்ளாா்.

2. இந்தியா வரும் டிசம்பர் மாதத்திற்குள் மூன்று நாடுகளுடன் இருதரப்பு முதலீட்டு பாதுகாப்பு ஒப்பந்தங்களை இறுதி செய்ய உள்ளதாக நிதியமைச்சர் திருமதி நிா்மலா சீதாராமன் கூறியுள்ளாா்.

3. மதுராந்தகம் தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் நாளை நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயாா்நிலையில் உள்ளன.

4. வள்ளலாரின் உயரிய கொள்கைகள் மனித நேயத்தின் மாபெரும் விழுமியங்களாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு. விஜய் புகழாரம் சூட்டியுள்ளாா்.

5. கோவை, நீலகிரி, தேனி, கிருஷ்ணகிரி, தர்மபுாி மாவட்டங்களில் இன்று இடி மின்னல் காற்றுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தொிவித்துள்ளது.

## இனி விரிவான செய்திகள்

***************

### பிரதமர்

இந்தியா - சுவிட்சர்லாந்து இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் 100 பில்லியன் டாலர் முதலீடுகளுக்கு இலக்கு நிா்ணயிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தொிவித்துள்ளாா்.

புதுதில்லியில் சுவிட்சர்லாந்து அதிபர் Guy Parmelin உடனான இருதரப்பு பேச்சுவாா்த்தைகளுக்கு பின்னர் இன்று உரையாற்றிய பிரதமர், இந்த ஒப்பந்தம் மூலம் நம் நாட்டில் அடுத்த 15 ஆண்டுகளில் 10 லட்சம் நேரடி வேலை வாய்ப்புகள் உருவாகும் என்று குறிப்பிட்டாா்.

ஐரோப்பா உடனான இந்தியாவின் தடையற்ற ஒப்பந்தங்களில் முதலாவது ஒப்பந்தம் சுவிட்சர்லாந்து நாட்டுடன் எட்டப்பட்டதாக குறிப்பிட்டாா்.

முன்னதாக சுவிட்சர்லாந்து அதிபருடன் வர்த்தகம், முதலீடு, அறிவியல் தொழில்நுட்பம், புத்தாக்கம், படைப்பாற்றல் திறன், முதலீடுகள், கலை, கலாச்சாரம், மக்கள் பரிவர்த்தனையில் ஒத்துழைப்பை முன்னெடுத்து செல்வது குறித்த பேச்சுவாா்த்தைகள் இடம்பெற்றது.

இப்பிரிவுகளில் பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்தாயின.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்முவை சுவிட்சர்லாந்து அதிபர் இன்றுமாலை சந்தித்து பேசுகிறார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கரையும் அவர் சந்தித்து பேச உள்ளார்.

***************

நிர்மலா சீதாராமன்

இந்தியா வரும் டிசம்பர் மாதத்திற்குள் குறைந்தது மூன்று நாடுகளுடன் இருதரப்பு முதலீட்டு பாதுகாப்பு ஒப்பந்தங்களை இறுதி செய்ய உள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மியூனிக் தலைவர்கள் கூட்டத்தில் இன்று உரையாற்றிய அமைச்சர் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தங்களுக்கான புதிய வரைவு தயாராக உள்ளதாகவும், அமைச்சரவை அனுமதிக்கு பின்னர் முதலீட்டாளர்களுக்கு சாதகமானதாக இது மேலும் மேம்படுத்தப்படும் என்றும் கூறினார்.

இந்த புதிய வரைவு இருதரப்பு முதலீட்டாளர்களுக்கும் பயனளிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

ஐக்கிய அரபு அமீரகம், ஓமன், மத்திய ஆசிய நாடுகளுடனும் ஒப்பந்தங்கள் முடிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

கனடா, ரஷ்யா உட்பட மேலும் பல நாடுகளுடன் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தங்களுக்கான பேச்சுவாா்த்தைகள் நடைபெறுவதாகவும் குறிப்பிட்டாா்.

வர்த்தக ஒப்பந்தங்களை இறுதி செய்யும் இந்தியாவின் அணுகுமுறையை இந்திய – ஐரோப்பா பேச்சுவாா்த்தைகள் பிரதிபலிப்பதாக கூறினாா்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் 92.5 சதவிகித இறக்குமதி வரி குறைப்பிற்கு இந்தியா வகை செய்திருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டாா்.

இதனிடையே இந்திய - அமொிக்க வர்த்தக பேச்சுவாா்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் எனினும் இறுதி முடிவு இன்னும் எட்டப்படவில்லை என்றும் தொிவித்தாா்.

இந்திய தரப்பிற்கு சாதகமாகவே பேச்சுவாா்த்தைகள் இருப்பதையும் அமைச்சர் எடுத்துரைத்தாா்.

இரு தரப்பிலும் நிலவும் முரண்பாடுகளை களையும் வகையில் இந்த பேச்சுவாா்த்தைகள் அமைந்துள்ளதாகவும் திருமதி நிா்மலா சீதாராமன் கூறினாா்.

***************

இடைத்தேர்தல்

மதுராந்தகம் தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் நாளை நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயாா்நிலையில் உள்ளன.

வாக்குப்பதிவு நாளைகாலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணிவரை நடைபெறும்.

மதுராந்தகத்தில் த.வெ.க, திமுக, அஇஅதிமுக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், நாம் தமிழர் கட்சிகளின் வேட்பாளர்கள் உட்பட 27 பேரும்,

தாராபுரம் தொகுதியில் 22 வேட்பாளர்களும் களத்தில் உள்ளனர்.

மதுராந்தகத்தில் 285 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில் 8 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளதாக எமது செங்கல்பட்டு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

இதேபோல் தாராபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள 320 வாக்குச்சாவடி மையங்களில் 320 நுண் பார்வையாளர் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்கின்றனர்.

ஆயிரத்து 486 பேர் தேர்தல் பணியில் ஈடுபட உள்ளதாக எமது திருப்பூர் செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ்

இடைத்தேர்தல் நடைபெறும் இவ்விரு தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு நாளை உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணிக்கை வரும் 9 ஆம்தேதி நடைபெறும்.

நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தலில் அஇஅதிமுக சா◌ா◌்பில் மதுராந்தகம் தொகுதியில் வெற்றிபெற்ற மரகதம் குமாரவேலும்,

தாராபுரம் தொகுதியில் வெற்றிபெற்ற சத்தியபாமாவும் தங்களது பதவியை ராஜினாமா செய்ததை தொடர்ந்து இவ்விரு தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

***************

சேவா சங்கல்ப்

.. Music ..

பிரதமர் திரு.நரேந்திரமோடி 25 ஆண்டுகள் பொது வாழ்க்கையை நிறைவு செய்த நிலையில், வளர்ச்சி அடைந்த பாரத பாதை என்ற பிரதமரின் தொலைநோக்கு பயணத்தின் கீழ், சமூக மேம்பாட்டு, அனைத்தையும் உள்ளடக்கி ஆக்கப்பூர்வமான மாற்றங்கள் நம் தேசத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது..

இவ்வளர்ச்சி பாதையில், மக்கள் சேவை உறுதிமொழி இயக்கத்தின் ஒருபகுதியாக, நொய்டா சர்வதேச விமான நிலையம் குறித்த செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

.. Music ..

நாட்டின் பிரம்மாண்ட பசுமை விமான நிலைய திட்டத்திற்கு எடுத்துக்காட்டாக, 11 ஆயிரத்து 200 கோடி ரூபாய் முதலீட்டில் உருவாக்கப்பட்டுள்ள, நொய்டா சர்வதேச விமான நிலையத்தை பிரதமர் கடந்த மா◌ா◌்ச் மாதம் நாட்டிற்கு அர்ப்பணித்தா◌ா◌்.

இந்த விமான நிலையம்  நொய்டா பகுதிக்கு ஒரு தனி அடையாளத்தையும், இளையோருக்கு வேலை வாய்ப்புகளையும் உருவாக்கி தந்துள்ளது.

முதற்கட்டமாக ஆண்டொன்றுக்கு ஒரு கோடியே 20 லட்சம் பயணிகளை கையாளும் திறனுடன் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த விமான நிலையம், எதி◌ா◌்காலங்களில் 7 கோடிக்கும் மேற்பட்டோரை  கையாளும் வகையில் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டின் விமான கட்டமைப்பையும், பிராந்திய சர்வதேச தொடர்புகளை வலுப்படுத்தும் வகையில், நொய்டா பசுமை விமான நிலையம் கட்டமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

நொய்டா விமான நிலையம் குறித்து திருச்சியை சேர்ந்த கட்டட பொறியாளர் திரு.கே.லோகநாதன் எமது செய்திப்பிரிவிடம் பேசுகையில்

.. Music ..

***************

வள்ளலார்

வள்ளலாரின் 204-ஆவது ஆண்டு பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் விடுத்துள்ள செய்தியில் வள்ளலாரின் உயரிய கொள்கைள் மனித நேயத்தின் மாபெரும் விழுமியங்களாக திகழ்கிறது என்று புகழாரம் சூட்டியுள்ளா◌ா◌்.

அன்பு, கருணையின் வடிவமாக திகழ்ந்த வள்ளலாரின் வழியில் தொடர்ந்து பயணிக்க அவர் அறிவுறுத்தினாா்.

வள்ளலாரின் அன்பு, அருள், பரிவு சமத்துவ பாதையில் பயணிக்க அனைவரும் உறுதி ஏற்க மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் அழைப்பு விடுத்துள்ளாா்.

இத்தினத்தை ஒட்டி திருவள்ளூர் மாவட்டம் சின்ன காவனத்தில் வள்ளலாரின் தாயாா் இல்லத்தில் சன்மாா்க்க கொடி ஏற்றப்பட்டு அகவல் பாராயணம் செய்யப்பட்டது.

***************

கீர்த்தனா

விருதுநகர் மாவட்டம் ஆலங்குளம் தமிழ்நாடு சிமெண்ட் ஆலை மறு சீரமைப்பு குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என மாநில தொழில்துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா தொிவித்துள்ளாா்.

சிவகாசியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த ஆலையை சீரமைப்பது குறித்து ஆய்வுகள் நடைபெற்று வருவதாக குறிப்பிட்டாா்.

பசுமை பட்டாசு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சரவெடிகளை தயாரிக்க உச்சநீதிமன்ற அனுமதி வழங்கியிருப்பது பட்டாசு உற்பத்தியாளர்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என்றும் அவர் கூறினாா்.

சட்டப்பேரவை இடைத்தேர்தலில் த.வெ.க வெற்றிபெறும் என்றும் அவர் நம்பிக்கை தொிவித்தாா்.

***************

டெங்கு

தமிழகத்தில் டெங்கு பாதிப்பு கட்டுக்குள் உள்ளதாகவும் அடுத்த 15 நாட்களுக்குள் இது மேலும் குறைய வாய்ப்புள்ளதாகவும் பொதுசுகாதாரத்துறை இயக்குனர் திரு. சோமசுந்தரம் தொிவித்துள்ளாா்.

நாகை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பருவமழை முன்னெச்சரிக்கை மற்றும் நோய்தடுப்பு நடவடிக்கைகளை இன்று நேரில் ஆய்வு செய்த அவர், அதுதொடர்பாக அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவர்களிடம் கேட்டறிந்ததாக கூறினாா்.

***************

பருவ மழை ஒத்திகை

விருதுநகாில் வடகிழக்கு பருவமழையை ஒட்டி தீயணைப்பு மற்றும் மீட்பு படையினர் நடத்திய மீட்பு ஒத்திகை முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஸரண்யா அறி பாா்வையிட்டாா்.

***************

உடுமலை

திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே திருமூர்த்திமலை பஞ்சலிங்க அருவியில் மூன்று மாதங்களுக்கு பின்னர் நீர்வரத்து சீராகியுள்ளதால் பக்தர்களும், சுற்றுலா பயணிகளும் அங்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

***************

## நீலகிரி மழை

நீலகி◌ா◌ி மாவட்டம் கோத்தகிரியில் விடிய விடிய கன மழை பெய்ததை அடுத்து அங்குள்ள நேரு பூங்காவில் மரம் விழுந்து மின்கம்பங்கள் சேதமாயின.

இவற்றை சீர் செய்யும் பணியில் மின்வாரிய ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

***************

## வானிலை

தமிழகம் மற்றும் தெற்கு உள் கர்நாடகா வழியாக நிலவும் காற்றழுத்த தாழ்வு பாதை காரணமாக கோவை மாவட்ட மலைபகுதிகள், நீலகிரி, தேனி, கிருஷ்ணகிரி, தர்மபுா◌ி மாவட்டங்களில் இன்று இடி மின்னல் காற்றுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தொா◌ிவித்துள்ளது.

திருச்சி, தஞ்சை, நாகை, புதுக்கோட்டை கரூர் கடலூர் உள்ளிட்ட 27 மாவட்டங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

***************

## கிரிக்கெட்

இந்தியாவிற்கு எதிரான அஹமதாபாத்தில் நடைபெறும் 2ஆவது இளையோா◌் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று, ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் 6 விக்கெட் இழப்பிற்கு 119 ரன் எடுத்திருந்தது.

***************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது